
# பாடம் 2



## ஒரு கருத்துப் பொருள்

*சிருஷ்டிகரான தேவன் எல்லா அதிகாரங்களையும்விட வலிமையானவர்*

சிருஷ்டிகரான தேவன் எல்லா அதிகாரங்களையும்விட வலிமையானவர்

## வேதாகமக் கதை

***சிருஷ்டிகரான தேவன் எல்லா அதிகாரங்களையும்விட வல்லமையுள்ளவர் என்ற கருத்தைக் கற்பிக்கும் கதையை பிள்ளைகளுக்குக் கூறுங்கள்***

**நற்செய்தி கதைப்புத்தகம் ஒன்று. பக்கம் 10-13.** *மிகவும் வலிமையானவர்.*

பக்கம் 10-13 உள்ள கதையை, *நற்செய்தி கதைப்புத்தகம் ஒன்றிலுள்ள* படங்களைக் காண்பித்து, சிறுவர்களுக்கு வாசியுங்கள்.

நீங்கள் வாசித்த பின் அக்கதையைக் குழந்தைகள் கூற வேண்டும்.

**குழந்தைகள் கதையை மறுபடியும் கூறுதல்:** ஒவ்வொரு குழந்தைக்கும் 1, 2, 1, 2, 1, 2 என்ற ஒன்று விட்ட எண்கள் கொடுக்கப்பட வேண்டும். ஒரு 1ம் எண் கொண்ட குழந்தை, ஒரு 2ம் எண் கொண்ட குழந்தையும் ஜோடி சேர்க்கப்பட வேண்டும். 1ம் எண் கொண்ட ஒவ்வொரு குழந்தையும் தன்னுடன் ஜோடிசேர்க்கப்பட்ட 2ம் எண் குழந்தையிடம் ஆசிரியர் கூறிய கதையை மறுபடியும் கூற வேண்டும். அவர்கள் கூறி முடித்த பின், 2ம் எண் கொண்ட குழந்தை, தன்னுடைய ஜோடியான 1ம் எண் குழந்தையிடம் மறுபடியும் அக்கதையைக் கூற வேண்டும். இப்படி அனைவரும் முடித்த பின், ஒரு குழுவாக மறுபடியும் ஒன்று கூட வேண்டும்.

### வினா – விடைப் போட்டி

குழந்தைகளிடம் கதையைப் பற்றிக் கேள்வி கேளுங்கள். குழந்தைகளை இரண்டு அணிகளாக பிரித்துக் கொள்ளுங்கள். முதல் அணியிடம் ஒரு கேள்வியைக் கேளுங்கள். அணியினர் கலந்தாலோசித்து ஒரு பதில் கூற வேணடும். சரியான விடை கூறினால், அவ்வணிக்கு ஒரு மதிப்பெண் கொடுங்கள். முதல் அணியினர் பதில் தரவில்லை என்றால், இரண்டாம் அணியினரிடம் அதே கேள்வியைக் கேளுங்கள். அவர்கள் கலந்தாலோசித்து ஒரே பதில் தர வேண்டும். அவர்கள் சரியான பதிலளித்தால், இரண்டாம் அணியினருக்கு ஒரு மதிப்பெண் கொடுங்கள்.

# பாடம் 2



மதிப்பெண்களை கரும்பலகையில் அல்லது தாளில் பட்டியலிடுங்கள்.

பின் இரண்டாம் அணியினரிடம் கதையைப்பற்றிய வேறு ஒரு கேள்வியைக் கேளுங்கள். அவர்கள் ஆலோசித்து ஒரே பதில் தர வேண்டும். சரியான பதிலுக்கு அவ்வணிக்கு ஒரு மதிப்பெண் கொடுங்கள். இல்லாவிட்டால் அதே கேள்வியை முதல் அணியினரிடம் கேளுங்கள். அவர்கள் கலந்தாலோசித்து ஒரே பதில் தர வேண்டும். அவர்கள் சரியான பதில் அளித்தால், அவர்களுக்கு ஒரு மதிப்பெண் கொடுங்கள்.

இப்படியாக இரு அணியினரிடம் மாறி மாறி கதையைப் பற்றிய கேள்விகளைக் கேளுங்கள்.

தவறான பதில் கூறினால், நன்முயற்சி ஆனால் சரியான பதிலல்ல என்று கூறி சரியான பதில் கூற குழந்தைகளை ஊக்குவியுங்கள். சரியான பதில் கூறினால் பாராட்டுங்கள்.

இங்கே எடுத்துக்காட்டாகச் சில கேள்வி பதில்கள் உள்ளன:

**யார் 'நான் சிருஷ்டிகரான தேவனைப் போலாவேன்' என்று கூறியது?**
தீய ஆவி.

சிருஷ்டிகரான தேவன் எல்லா அதிகாரங்களையும்விட வலிமையானவர்

**இக்கதையின் மூலம் நாம் கற்றக்கொள்வது என்ன?**
சிருஷ்டிகரான தேவன் மிகவும் வலிமையானவர்.

**இந்த ஆவிகளின் போராட்டம் எங்கே நடந்தது?**
பரலோகத்தில்.

**சிருஷ்டிகரான தேவன் ஏன் வலிமையானவர்?**
எல்லாவற்றையும் அவரே உருவாக்கினபடியால் அவர் வலிமையானவர்.


**சிருஷ்டிகரான பிதா வலிமையானவர் என்று அறிந்து கொண்டதால் நம் வாழ்வில் அதன் பயன் என்ன?**
சிருஷ்டிகரான தேவன் மிகவும் வலிமையானவர் ஆதலால் தீய ஆவிக்கும் மற்ற எல்லா தீய ஆவிகளுக்கும் என் மேல் எந்த அதிகாரமும் இல்லை என்று அறிவேன். நான் சிருஷ்டிகரான தேவனைக் குறித்துப் பாடுவேன்.

# பாடம் 2



## செய்கைப் பாடல்

***சிருஷ்டிகரான தேவன் எல்லா அதிகாரங்களையும் விட மிக வலிமையானவர் என்று கற்பிக்கும் ஒரு செய்கைப் பாடலைக் கற்றுக் கொடுங்கள்***



சர்வ வல்லவர் என் பெலனானார்
சர்வ சிருஷ்டிகர் என் ஜெயமானார் } 2

ஆ ஆ ஆ இது அதிசயம் தானே
ஒ ஒ ஒ இது உன்மை தானே } 2

கர்த்தரே சர்வ வல்லவர்
கர்த்தரே சர்வ சிருஷ்டிகர்



கர்த்தரே என் சூப்பர் ஸ்டார்
கர்த்தரே என் ஹீரோ

## பொருள் கண்டு கற்றல்

***அனுதின வாழ்வில் நடைபெறும் காரிங்களைக் கொண்டு, சிருஷ்டிகரான கர்த்தர் எல்லா அதிகாரங்களை விட மிக வலிமையானவர் என்று கற்றுக்கொடுங்கள்.***



குழுவில் உள்ள சிறு பையனுக்கும் பெரிய பையனுக்கும், அல்லது ஒரு சிறு பெண்ணுக்கும் பெரிய பெண்ணுக்கும் இடையே கை மல்யுத்த போட்டி நடத்தி, எப்படி வலிமை மிகுந்தவர்களே வெற்றி பெறுகிறார்கள் என்பதை எடுத்துரைத்து, இவ்வாறே சிருஷ்டிகரான தேவன் சர்வ வல்லமையுள்ளவர் எப்பொழுதும் வெற்றிபெறுகிறார். தீய ஆவிகளை மேற்கொண்டார், அவைகள் வீழ்ந்தன, போராட்டத்தில் தோற்றுவிட்டன.



## வேத மனப்பாட வசன விளையாட்டு

***சிருஷ்டிகரான தேவன் எல்லா அதிகாரங்களையும் விட வலிமையானவர் என்று போதிக்கும் வேத வசனத்தை உபயோகியுங்கள்***

சிருஷ்டிகரான தேவன் எல்லா அதிகாரங்களை யும்விட வலிமையானவர்

**வெளிப்படுத்தின விசேஷம் 12:8** *'பாம்பு போதுமான வல்லமை உடையதாய் இல்லை. (தீய ஆவிகள்) இராட்சசப் பாம்பும், (தீய ஆவிகள்) அதன் தூதர்களும் பரலோகத்தில் தம் இடத்தை இழந்தார்கள்.'*

**புதிர் பட வார்த்தைகள்:** சிறு குழந்தைகள் வாசிக்க அறியவில்லை என்றால் வார்த்தைகளுக்குப் பதிலாக சித்திரங்களை உபயோகிக்கலாம். இம்மனப்பாட வசனத்தில் பதிமூன்று வார்த்தைகள் உள்ளபடியால் (ஒரே அளவிலான) பதிமூன்று துண்டுக் காகிதங்களை எடுத்துக்கொள்ளுங்கள். ஒவ்வொரு துண்டிலும் ஒவ்வொரு வார்த்தையை எழுதிக்கொள்ளுங்கள். ஒவ்வொரு துண்டிலும் 5 என்று சிறிதாக மதிப்பைக் குறிப்பிடுங்கள். 'போதுமான,' 'வல்லமை,' 'உடையதாயில்லை' என்ற மூன்று வார்த்தைகள் உள்ள துண்டுகளில் மட்டும் 30 என்று மதிப்பை எழுதுங்கள்.

பின் அத்துண்டுகளிலுள்ள வார்த்தையையும் மதிப்பெண்களையும் யாரும் காண முடியாதபடி திருப்பி வைத்து, வசனம் கோர்வையாக இல்லாதபடி துண்டுகளைக் கலந்து வையுங்கள்.

குழந்தைகளை இரண்டு அணிகளாகப் பிரித்துக் கொள்ளுங்கள். ஒரு குழந்தையைத் தன் அணிக்காக ஒரு துண்டைத் தேர்வு செய்யச் சொல்லுங்கள். அத்துண்டில் உள்ள மதிப்பெண்ணை அவ்வணிக்கு வழங்குங்கள்.

கரும்பலகையிலோ அல்லது ஒரு காகிதத்திலோ மதிப்பெண்களை பட்டியலிடுங்கள்.

அடுத்த அணியிலிருந்து ஒரு குழந்தையை ஒரு துண்டை எடுக்க அழையுங்கள். அத்துண்டிலுள்ள மதிப்பெண்ணை அவ்வணிக்கு வழங்குங்கள். இரு அணிகளும் மாறி மாறி அனைத்து வார்த்தைகளும் தெரிய வரும்வரை காகிதத் துண்டுகளை எடுக்க வேண்டும்.

சிருஷ்டிகரான தேவன் எல்லா அதிகாரங்களை யும்விட வலிமையானவர்

பின் வேத வசனத்தை சரியான கோர்வையில் யார் அமைக்க முடியும் என்று கேளுங்கள். (முதலாவதாகக் கை உயர்த்துபவர்) சரியான அமைத்தால், கூடுதலாக 10 மதிப்பெண்களை அவ்வணிக்கு வழங்குங்கள். மதிப்பெண்களைக் கூட்டி வெற்றி பெற்ற அணியை அறிவியுங்கள்.

குழந்தைகள் இன்னும் எழுதப் படிக்க ஆரம்பிக்கவில்லை என்றால், ஆசிரியரே வசனத்தைக் கோர்வையாக அமைத்து, அவர்கள் அவ்வசனத்தை மனப்பாடம் செய்யச் சொல்லிக் கொடுங்கள்.

அனைவரும் கைகளைத் தட்டி வெற்றியணியை வாழ்த்துங்கள். அவ்வசனத் துண்டு காகிதங்களைக் குழந்தைகள் காணும்படி சரியான வரிசையில் அடுக்கி வையுங்கள்.

## நடைமுறை செயல்படுத்தல்

***சிருஷ்டிகரான தேவன் எல்லா அதிகாரங்களையும்விட வல்லமையானவர் என்று கற்பிக்கும் நடைமுறை செயல்படுத்தலை உபயோகியுங்கள்***

சிருஷ்டிகரான தேவன் வலிமையானவர், ஆதலால் தீய ஆவிக்கும் மற்ற எல்லாத் தீய ஆவிகளுக்கும் என் மேல் எந்த ஒரு அதிகாரமோ வல்லமையோ கிடையாது என்று அறிவேன். நான் சிருஷ்டிகரான தேவனையே துதித்துப் பாடுவேன்.

ஜெபம்: சிருஷ்டிகரான தேவனே நீர் மிகவும் வலிமையானவர் எனவே உமக்கு நன்றி. நான் உம்மைக் குறித்துப் பாடுவேன். தீய ஆவிக்கும் மற்றெல்லாத் தீய ஆவிகளுக்கும் என்மேல் அதிகாரம் இல்லை. ஏனென்றால் நீரே மிகவும் வல்லமையுள்ளவர். எனக்காக நீர் வெற்றி சிறந்தீர். ஆமென்.

# பாடம் 3



## ஒரு கருத்துப் பொருள்

நாம் சிருஷ்டிகரான தேவனுக்குக் கீழ்ப்படியாமல், இருளில் தொலைந்து போனாலும், சிருஷ்டிகரான தேவன் நம்மேல் அன்புள்ள வராகவே இருக்கிறார்









*நாம் சிருஷ்டிகரான தேவனுக்குக் கீழ்ப்படியாமல், இருளில் தொலைந்து போனாலும், சிருஷ்டிகரான தேவன் நம்மேல் அன்புள்ளவராகவே இருக்கிறார்*

## வேதாகமக் கதை

*நாம் சிருஷ்டிகரான தேவனுக்குக் கீழ்ப்படியாமல், இருளில் தொலைந்து போனாலும், சிருஷ்டிகரான தேவன் நம்மேல் அன்புள்ளவராகவே இருக்கிறார் என்ற கருத்தைக் கற்பிக்கும் கதையைக் குழந்தைகளுக்குக் கூறுங்கள்*

**நற்செய்திக் கதைப்புத்தம் ஒன்று. பக்கம் 14-24.** *இருளில் மறைவு.*

**தேவையான பொருட்கள்:** வரைவதற்குக் கரும்பலகையும் சுண்ணாம்பு எழுதுகோலும், அல்லது மண், குச்சி, அல்லது காகிதமும் எழுதுகோலும். குழந்தைகளுக்கு வரைபடக் காகிதம் அல்லது காகிதம் மற்றும் எழுதுகோல், அழிப்பான் கொடுக்கப்பட வேண்டும்.

படம் வரைந்து, கதையைக் குழந்தைகளுக்குக் கூறுங்கள்.


1, 2, 3 கதை கேட்கலாம்...

முதலாவது மனுஷனையும் மனுஷியையும் என்னால் பார்க்க முடிகிறது.

சிருஷ்டிகரான தேவன் பேசுவதை என்னால் கேட்க முடிகிறது, 'நன்மை தீமையின் மரத்திலிருந்து சாப்பிடாதே.'
முதல் மனுஷனும் மனுஷியும் கீழ்ப்படியவில்லை… கீழ்ப்படியவில்லை… கீழ்ப்படியவில்லை.
தீய ஆவி சொல்வதை என்னால் கேட்க முடிகிறது, 'நீங்கள் சிருஷ்டிகரான தேவனைப் போலாவீர்கள். நன்மை தீமையின் மரத்திலிருந்து சாப்பிடுங்கள்.'
முதல் மனுஷி கவனிக்கிறாள்… கவனிக்கிறாள்… கவனிக்கிறாள்.
முதல் மனுஷி சொல்வதை என்னால் கேட்க முடிகிறது. 'நான் சிருஷ்டிகரான தேவனைப் போலாவேன். நன்மை தீமை மரத்திலிருந்து நான் சாப்பிடுவேன்.'
முதல் மனுஷி சாப்பிடுகிறாள்… சாப்பிடுகிறாள்…சாப்பிடுகிறாள்.
முதல் மனுஷன் சொல்வதை என்னால் கேட்க முடிகிறது. 'நான் சிருஷ்டிகரான தேவனைப் போலாவேன். நன்மை தீமை மரத்திலிருந்து நான் சாப்பிடுவேன்.'
முதல் மனுஷன் சாப்பிடுகிறான்... சாப்பிடுகிறான்... சாப்பிடுகிறான்.

# பாடம் 3





முதல் மனுஷன் மனுஷியை நான் பார்க்க முயற்சிக்கிறேன். முதல் மனுஷனும் மனுஷியும் ஒளிகிறார்கள்.
சிருஷ்டிகரான தேவன் பேசுவதை என்னால் கேட்க முடிகிறது, ‘நான் இன்னும் உங்களை நேசிக்கிறேன்!’
‘நான் உங்களை மீட்பேன். நீங்கள் என்னைக் கண்டுகொள்வீர்கள்.’
சிருஷ்டிகரான தேவன் வருகிறார்…

**வினா – விடை போட்டி**

குழந்தைகளிடம் கதையைப் பற்றிக் கேள்வி கேளுங்கள். குழந்தைகளை இரண்டு அணிகளாக பிரித்துக் கொள்ளுங்கள். முதல் அணியிடம் ஒரு கேள்வியைக் கேளுங்கள். அணியினர் கலந்தாலோசித்து ஒரு பதில் கூற வேணடும். சரியான விடை கூறினால், அவ்வணிக்கு ஒரு மதிப்பெண் கொடுங்கள். முதல் அணியினர் பதில் தரவில்லை என்றால், இரண்டாம் அணியினரிடம் அதே கேள்வியைக் கேளுங்கள். அவர்கள் கலந்தாலோசித்து ஒரே பதில் தர வேண்டும். அவர்கள் சரியான பதிலளித்தால், இரண்டாம் அணியினருக்கு ஒரு மதிப்பெண் கொடுங்கள்.

மதிப்பெண்களை கரும்பலகையில் அல்லது தாளில் பட்டியலிடுங்கள்.

பின் இரண்டாம் அணியினரிடம் கதையைப்பற்றிய வேறு ஒரு கேள்வியைக் கேளுங்கள். அவர்கள் ஆலோசித்து ஒரே பதில் தர வேண்டும். சரியான பதிலுக்கு அவ்வணிக்கு ஒரு மதிப்பெண் கொடுங்கள். இல்லாவிட்டால் அதே கேள்வியை முதல் அணியினரிடம் கேளுங்கள். அவர்கள் கலந்தாலோசித்து ஒரே பதில் தர வேண்டும். அவர்கள் சரியான பதில் அளித்தால், அவர்களுக்கு ஒரு மதிப்பெண் கொடுங்கள்.

இப்படியாக இரு அணியினரிடம் மாறி மாறி கதையைப் பற்றிய கேள்விகளைக் கேளுங்கள்.

தவறான பதில் கூறினால், நன்முயற்சி ஆனால் சரியான பதிலல்ல என்று கூறி சரியான பதில் கூற குழந்தைகளை ஊக்குவியுங்கள். சரியான பதில் கூறினால் பாராட்டுங்கள்.

இங்கே சில கேள்விகளும் பதில்களும் எடுத்துக்காட்டாகத் தரப்பட்டுள்ளன.

நாம் சிருஷ்டிகரான தேவனுக்குக் கீழ்ப்படியாமல், இருளில் தொலைந்து போனாலும், சிருஷ்டிகரான தேவன் நம்மேல் அன்புள்ள வராகவே இருக்கிறார்

# பாடம் 3

நாம் சிருஷ்டிகரான தேவனுக்குக் கீழ்ப்படியாமல், இருளில் தொலைந்து போனாலும், சிருஷ்டிகரான தேவன் நம்மேல் அன்புள்ள வராகவே இருக்கிறார்

**'நீங்கள் சிருஷ்டிகரான தேவனைப் போலாவீர்கள். நன்மை தீமையின் மரத்திலிருந்து சாப்பிடுங்கள்,' என்று கூறியது யார்?**

தீய ஆவி.

**முதல் மனுஷனும் மனுஷியும் யாருக்குச் செவிசாய்த்தார்கள், சிருஷ்டிகரான தேவனுக்கா அல்லது தீய ஆவிக்கா?**

தீய ஆவிக்கு செவிசாய்த்தார்கள்.


**சிருஷ்டிகரான தேவனிடமிருந்து ஏன் முதல் மனுஷனும் மனுஷியும் ஒளிந்தார்கள்?**
அவர்கள் சிருஷ்டிகரான தேவனுக்குச் செவிசாய்க்காமல், அவர் செய்யாதே என்று கூறிய காரியத்தைக் கீழ்ப்படியாமல் செய்ததால் வெட்கப்பட்டார்கள்.

**முதல் மனுஷனும் மனுஷியும் சிருஷ்டிகரான தேவனிடத்திலிருந்து ஒளிந்து கொண்ட பிறகு அவர் அவர்களிடம் என்ன கூறினார்?**
'நான் உங்களை இன்னும் நேசிக்கிறேன்! நான் உங்களை மீட்பேன். நீங்கள் என்னைக் கண்டுகொள்வீர்கள்.'

**இக்கதையின் மூலம் நாம் சிருஷ்டிகரான தேவனைக் குறித்து அறிந்து கொள்வது என்ன?**
சிருஷ்டிகரான தேவன் நம்மை நேசிக்கிறார்.

**சிருஷ்டிகரான பிதா வலிமையானவர் என்று அறிந்து கொண்டதால் நம் வாழ்வில் அதன் பயன் என்ன?**
சிருஷ்டிகரான தேவன் மிகவும் வலிமையானவர் ஆதலால் தீய ஆவிக்கும் மற்ற எல்லா தீய ஆவிகளுக்கும் என் மேல் எந்த அதிகாரமும் இல்லை என்று அறிவேன். நான் சிருஷ்டிகரான தேவனைக் குறித்துப் பாடுவேன்.

**குழந்தைகளை இக்கதையை வரையச் சொல்லுங்கள்.**



## செய்கைப் பாடல்

*நாம் நம் சிருஷ்டிகரான தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருளில் தொலைந்து போனாலும், சிருஷ்டிகரான தேவன் நம்மை நேசிக்கிறவராகவே இருக்கிறார் என்று கற்பிக்கும் செய்கைப் பாடலைக் கற்றுக்கொடுங்கள்*

ஒ தேவனுக்கு மகிமை தூக்கி எடுத்தார்

என்னை தூக்கி எடுத்தார் தேவன்

தம் கரத்தை நீட்டி இரட்சித்தாரே

ஒ தேவனுக்கு மகிமை

நான் தேவனை நேசிக்கிறேன்

மென்மேலும் நேசிக்கிறேன்

அக்கரையில் நான் நின்று அவரை

என்றென்றும் வாழ்த்துவேன்

# பாடம் 3

## பொருள் கண்டு கற்றல்

***அன்றாட வாழ்வில் நாம் காணும் ஒரு பொருளைக் கொண்டு, நாம் நம் சிருஷ்டிகரான தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருளில் தொலைந்து போனாலும், சிருஷ்டிகரான தேவன் நம்மேல் அன்புள்ளவராகவே இருக்கிறார் என்பதைக் கற்றுக்கொடுங்கள்***

**தேவையான பொருட்கள்:** ஒரு பெரிய தாள், கத்திரிக்கோல்.

தாளில் ஒரு இருதய வடிவத்தை வரைந்து அதனுள் *'சிருஷ்டிகரான தேவனின் அன்பு,'* என்று எழுதுங்கள். குழந்தைகளிடம் அதைக் காண்பியுங்கள். *சிருஷ்டிகரின் அன்பை* நாம் அனைவரும் பெற்றுக்கொள்ளவும் நாமும் அவ்வன்பைப் பிறருக்கு அளிக்கவும் முடியும் என்று விவரியுங்கள். அத்தாளின் நான்கு முனைகளையும் குறிப்பிட்டுக் காட்டுங்கள்.

ஆசிரியர்: இந்த நான்கு முனைகளாகிய சிருஷ்டிகரான தேவனின் அன்பில் ஒரு முனையை உங்களிடம் கொடுத்தால், என்னிடம் மீதம் எத்தனை முனைகள் இருக்கும்?

குழந்தைகள்: 4-1=3.

கத்திரிக்கோல் கொண்டு ஒரு முனையை வெட்டி குழந்தைகளிடம் கொடுங்கள்.

ஆசிரியர்: இப்பொழுது எண்ணிப் பாருங்கள்?

குழந்தைகள்: 1, 2, 3, 4… 5!

ஆசிரியர்: என்னிடம் இருந்த நான்கு முனைகளில் ஒன்றை உங்களிடம் கொடுத்தேன். ஆனால் இப்பொழுது என்னிடம் *ஐந்து* முனைகள் உள்ளன!

நாம் சிருஷ்டிகரான தேவனுக்குக் கீழ்ப்படியாமல், இருளில் தொலைந்து போனாலும், சிருஷ்டிகரான தேவன் நம்மேல் அன்புள்ள வராகவே இருக்கிறார்

மற்ற மூன்று முனைகளையும் வெட்டுங்கள்.


ஆசிரியர்: இப்பொழுது எண்ணிப் பாருங்கள்?

குழந்தைகள்: 1, 2, 3, 4, 5, 6, 7… 8!

இந்த முனைகளைப் போலவே, தேவனின் அன்பும் நாம் எவ்வளவு பிறருக்குக் கொடுக்கிறோமோ, அவ்வளவு மிகப் பெரிதாகிறது.

சிருஷ்டிகரான தேவனின் அன்பு மிகப் பெரியது. அதை நம்மால் அளவிடவே முடியாது.

# பாடம் 3



## வேத மனப்பாட வசன விளையாட்டு

***நாம் நம் சிருஷ்டிகரான தேவனுக்குக் கீழ்ப்படியாமல், இருளில் தொலைந்து போனாலும் சிருஷ்டிகரான தேவன் நம் மேல் அன்புள்ளவராக இருக்கிறார் என்பதைக் கற்பிக்கும் வசனத்தை சொல்லிக் கொடுங்கள்***

**சங்கீதம்** 103:4 *'தேவன் (சிருஷ்டிகரான தேவன்) கல்லறையிலிருந்து நம் உயிரை மீட்கிறார். அவர் நமக்கு அன்பையும் தயவையும் தருகிறார்.'*

**வார்த்தைச் சித்திர வட்டம்**: குழந்தைகள் வட்டமாக உட்கார வேண்டும். குழந்தைகளிடம் வேத வசனத்தைக் காட்டி, ஒவ்வொரு வார்த்தையாக வாசித்துக் காண்பியுங்கள். அவர்கள் அதை முழுமையாகக் கற்றுக் கொள்ளும்வரை திரும்பச் சொல்லச் சொல்லுங்கள். பின் அவ்வசனத்தை குழந்தைகளிடமிருந்து மறைத்துக் கொள்ளுங்கள்.

ஒரு பந்தையோ அல்லது காகிதங்களைக் கசக்கி பந்துபோலாக்கி, அதை ஒரு குழந்தையிடம் வீசுங்கள்.

அக்குழந்தை அப்பந்தைப் பிடித்தபின் அவ்வசனத்தின் முதல் வார்த்தையைக் கூறி, ஆசிரியரிடம் பந்தைத் திரும்ப வீச வேண்டும். பின் ஆசிரியர் பந்தை அடுத்த குழந்தையிடம் வீச, அக்குழந்தைப் பந்தைப் பிடித்தபின் அவ்வசனத்தின் அடுத்த வார்த்தையைக் கூறி, திரும்பவும் ஆசிரியரிடம் பந்தை வீச வேண்டும். இவ்வாறு வசனத்தின் அனைத்து வார்த்தைகளும், இருப்பிடமும் சங்கீதம் 103:4 சொல்லி முடியும் வரை, பந்தை ஆசிரியர் – குழந்தை - ஆசிரியர் என்று மாறி மாறி வீச வேண்டும்.

நாம் சிருஷ்டிகரான தேவனுக்குக் கீழ்ப்படியாமல், இருளில் தொலைந்து போனாலும், சிருஷ்டிகரான தேவன் நம்மேல் அன்புள்ள வராகவே இருக்கிறார்

## நடைமுறை செயல்படுத்தல்

***நாம் சிருஷ்டிகரான தேவனுக்குக் கீழ்ப்படியாமல் இருளில் தொலைந்து போனாலும் சிருஷ்டிகரான தேவன் நம்மேல் அன்புள்ளவராகவே இருக்கிறார் என்பதை அன்றாட வாழ்வில் எப்படிக் காண்கிறோம் என்று கற்பியுங்கள்***

சிருஷ்டிகரான தேவன் நம்மேல் அன்பு கூறுகிறார் என்று நாம் அறிந்திருக்கும்போது சிருஷ்டிகரான தேவன் நம்மை மீட்டு விடுவிப்பார் என்று நாம் விசுவாசிக்கிறோம்.

**ஜெபம்**: சிருஷ்டிகரான தேவனே நீர் எப்பொழுதும் என்னை நேசிக்கிறதற்காக உமக்கு நன்றி. நான் உம்மைக் குறித்தோ அல்லது பிறரைக் குறித்தோ தவறானவற்றை பேசினாலும், சிந்தித்தாலும், செய்தாலும் நீர் என்மேல் அன்பாகவே இருக்கிறீர். நீர் என்னை மீட்டுக் கொள்கிறதற்காக உமக்கு நன்றி. சிருஷ்டிகரான தேவனே நான் மேலும் உம்மைப்பற்றியும், நீர் என் மேல் கொண்ட உம் அன்பைப் பற்றியும், நீர் எனக்காக செய்த எல்லாவற்றையும் அறிய எனக்கு உதவி செய்யும். ஆமென்.

**பரிசு: ஒவ்வொரு குழந்தைக்கும் அவரவரது பிரதி** *நற்செய்தி கதைப்புத்தகம் ஒன்று* கொடுங்கள். ஒவ்வொரு குழந்தையும் தன் *நற்செய்தி கதைப்புத்தகம் ஒன்று* பிரதியை வாசிக்க உதவி செய்யுங்கள்.